**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) அவர்களின் செயல்முறைகள், சென்னை – 600 006.**

**ந.க. எண். 19530 /எம்/இ4/2022, நாள் : .07.2022**

பொருள் : பள்ளிக் கல்வி – 2022-2023 ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளில் கலந்து கொள்ளும் விதமாக 6 முதல் 8 ஆம் வகுப்புகள் வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு 01.08.2022 முதல் 05.08.2022 வரை நடைபெறவுள்ள பயிற்சி முகாம்களில் கலந்து கொள்ள அறிவுறுத்திட கோருதல் – சார்ந்து.

பார்வை : சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க. எண். 019530/எம்/இ4/2022, நாள் 25.06.2022.

****

பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளபடி 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் அரசு / தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு பள்ளி / வட்டாரம் / மாவட்ட அளவில் சதுரங்க விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அதில் 14 / 17 / 19 ஆகிய வயதுப் பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்கள் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் 27.07.2022 முதல் 10.08.2022 வரை நடைபெறவிருக்கும் சர்வதேச அளவிலான 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுடன் கலந்துரையாடவும், வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு அதன்படி செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. மேலும், இதன் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களிலும் 6ம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 25.07.2022 அன்று நடைபெற்ற **மாவட்ட அளவிலான சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் (Winners) மற்றும் இரண்டாம் இடங்களில் (Runners) வெற்றி பெற்றுள்ள மாணவ / மாணவியர்களுக்கு செங்கல்பட்டு மாவட்டம், மகாபலிபுரம் அருகில் உள்ள சதுரங்கப்பட்டினத்தில் நடைபெற்று வரும் 44வது பன்னாட்டு சதுரங்க விளையாட்டுப் போட்டிகளை பார்வையிடவும், சர்வதேச விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடவும் மற்றும் மாணவ / மாணவியர்களுக்கு சதுரங்க போட்டிகள் தொடர்பான பயிற்சி வகுப்புகள் 01.08.2022 முதல் 05.08.2022 வரை வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.**

3. மேலும், மாவட்ட அளவில் வெற்றி பெற்றுள்ள இம் மாணவ / மாணவியர்களுக்கு **மாநில அளவிலான சதுரங்க விளையாட்டு போட்டிகளும் நடைபெற உள்ளதால்** தங்களது மாவட்டத்தில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை நடைபெற்ற சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்றுள்ள மாணவ / மாணவியர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் கண்டுள்ளபடி மாவட்டம் வாரியாக இடம் பெற்றுள்ள மாணவ / மாணவியர்களை **31.07.2022 அன்று மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்டுள்ள முகவரிக்கு வருகை** புரிந்திட ஏதுவாக, இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி பொறுப்பாசிரியர்களை நியமித்து அவர்கள் மூலம் பயிற்சி முகாம்களில் மாணவ / மாணவியர்கள் கலந்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| |
|---|
| **புனித ஜோசப் தொழிற்நுட்பக் கல்லூரி,<br>பழைய மகாபலிபுரம் சாலை,<br>செம்மஞ்சேரி, சென்னை – 600 119,<br>செங்கல்பட்டு மாவட்டம்.** |

<u>வழிகாட்டு நெறிமுறைகள்</u>

**I. 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு**

1. 6 முதல் 8 ஆம் வகுப்புகள் வரை கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு மாவட்ட அளவிலான சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் (Winners) மற்றும் இரண்டாம் இடங்களில் (Runners) வெற்றி பெற்றுள்ளவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி தங்களுக்குத் தேவையான உடைமைகளை வரிசை எண். 5-ல் உள்ளபடி கொண்டு வர அறிவுறுத்திடல் வேண்டும்.

2. இணைப்பு பெயர்ப்பட்டியலில் கண்டுள்ள மாணவ / மாணவியர்களை தங்களது மாவட்டத்திலிருந்து மூத்த அனுபவமிக்க பொறுப்பாசிரியர்களை நியமித்து அவர்கள் வாயிலாக பயிற்சி முகாமிற்கு அழைத்து வரவும், பின்னர் பயிற்சிகள் முடிந்தவுடன் அழைத்துச் செல்லவும் அறிவுறுத்திடல் வேண்டும்.

3. சார்ந்த மாணவ / மாணவியர்களது பெற்றோர்களிடம் அனுமதி கடிதம் பெற்ற பின்னரே அழைத்து வருதல் வேண்டும்.

4. சார்ந்த மாணவ / மாணவியர்கள் தாங்கள் வருகை புரியும் போது சதுரங்க விளையாட்டு போட்டிக்கான அட்டையினையும் மற்றும் அதற்கான நாணயங்களுடன் (Chess Board & Coins) வருகை புரிதல் வேண்டும்.

5. மாணவர்களுக்கும் / பொறுப்பாசிரியர்களுக்கும் பயிற்சி முகாம்களுக்கு வந்து செல்வதற்கான இருவழி பயணப்படிகள் பயிற்சி முகாம்களில் நேரிடையாக வழங்கப்பட உள்ளதால் அதற்கான தகுந்த முன்னேற்பாடுகளுடன் வருகை புரிந்திட அறிவுறுத்திட வேண்டும்.

6. முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் வெற்றி பெற்றுள்ள மாணவர்கள் அனைவரும் தங்களுக்குரிய 2 செட் பள்ளிச் சீருடைகள், 2 செட் சீருடைகள் இல்லாத ஆடைகள், 1 போர்வை, 1 ஸ்வட்டர் மற்றும் தங்களுக்கு தேவையான 5 நாட்களுக்குரிய அனைத்து உடைமைகளுடன் தயார் நிலையில் வருகை புரிதல் வேண்டும்.

3. எனவே, மேற்காண் வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களும் நடைமுறைப்படுத்திட ஏதுவாக சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>இணைப்பு :</u>**
மாவட்ட வாரியான பெயர்ப்பட்டியல்

**இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்)**
**சென்னை – 600 006.**

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

<u>நகல்</u>
1. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், சென்னை-6
(தகவலுக்காக அனுப்பப்படுகிறது)
2. அலுவலக கோப்பிற்கு